1 ஜனவரி 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

மரியா, இறைவனின் தாய் - பெருவிழா

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்: **கல்வி**

# கிறிஸ்மஸ் பெருவிழாவில் நமது குடும்பம்

அன்னை மரியாவின் ஆசீர்வதிக்கப்பட்ட தாய்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, நம் உள்ளங்கள் ஆச்சரியத்தாலும், நன்றியாலும், கடவுளின் நிபந்தனையற்ற அன்பை விவரிக்கமுடியாத பயபக்தியான அமைதியாலும் நிரம்பியுள்ளன. நம் முன்னால் ஒரு அன்னை, ஒரு மனைவி, ஒரு மகள் மற்றும் ஒரு பெண் நிற்கிறார். அவர் கொந்தளிப்புகளுக்கு மத்தியில் உன்னதராம் கடவுளுக்குத் தாயாக இருக்க வேண்டும் என்ற அழைப்புக்கு மறுமொழி அளித்தார். இன்று அன்னை மரியாவின் காரணமாக, நம் குடும்பங்களில், மனிதராக, எதிர்நோக்குடன் கூடிய, பலவீனமான அதே வேளையில் உறுதியான வடிவத்தில் அன்னையின் வழியாக நாம் கடவுளோடு இணைந்திருக்கும் சலுகை நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.



கிறிஸ்மஸின் போது, இயேசு மட்டும் நமக்குப் பரிசாக அல்ல; முதல் குடும்பமான அன்னை மரியா மற்றும் யோசேப்பும் இணைந்து நமக்குப் பரிசாக வழங்கப்படுகிறது. நம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரி. அன்பு, அக்கறை, எளிமை, ஒற்றுமை இறைவார்த்தைக்கு கீழ்ப்படிதல் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. கிறிஸ்மஸ் என்றாலே எப்போதும் பரிசு, அலங்காரம், இனிப்புகள், பனிமனிதன், கிறிஸ்மஸ் தாத்தா, நம்மைச் சுற்றியுள்ள இடங்களுக்கு பச்சை, சிவப்பு வர்ணம் பூசுவது இது மட்டுமல்ல; இது அன்பு, அக்கறை, ஒன்றித்திருத்தல், குடும்பங்களுக்குள்ளே மரியாதை தருதல் சுருக்கமாக சொல்வதென்றால், பெத்லகேமில் உள்ள திருக்குடும்பத்தைப் போல இருப்பது தான் கிறிஸ்மஸ்.

இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுவதைப் போல (லூக்கா 2: 16-21) இடையர்களின் வருகை உட்பட இந்த இளம்தாய், தன்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்வையும் ஆழமாக எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? இவர் ஒரு கற்பனையில் வரும் அசாதாரணமானப் பெண் அல்ல; இவர் ஒரு அன்னை, எதிர்நோக்கு, நம்பிக்கை, வாழ்தல் மற்றும் அளித்தல் ஆகியவற்றை வாழ்ந்துகாட்டும் திருஅவையின் ஒரு முன்மாதிரி. ஆனால் இன்று நம் குடும்பங்களில் நம் தேவைகள் அனைத்துக்கும் விரல்நுனியில் பதில்தேடும் அடிமைகளாகிவிட்டோம்.

பல சமயங்களில் கடவுளை கண்டுபிடிக்கும் தருணங்களில் வாழ்க்கையின் சவாலான நிச்சயமற்ற தன்மைகள் நம் குடும்பங்களையும் உறவுகளையும் உடைத்துப்போட்டு, முழுமையாக உயிர்வாழத் தடையாய் இருப்பவற்றில் நாட்டம் கொள்கிறோம். மரியா தன்னுடைய குடும்ப வாழ்க்கையில் தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாய் இருந்தார்; பொறுமை, சகிப்புத்தன்மை, மகிழ்ச்சியோடு காத்திருத்தல், கடவுளிடம் கொண்டிருந்த எதிர்நோக்கு, ஆழ்ந்த சிந்தனை மற்றும் இறைவேண்டல். உண்மையில் இது எவ்வளவு அழகானது. உண்மையில் இந்தக் காலக்கட்டத்தில் இதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது. இயேசு பிறக்க மரியாவுக்கும் யோசேப்புக்கும் சத்திரத்தில் இடம் இல்லாததுபோல இவற்றுக்கெல்லாம் இடமளிக்க உள்ளங்களும் இல்லை; இல்லங்களும் இல்லை. இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில் நின்று நிதானித்து, நம்முடைய உண்மையான நம்பிக்கையைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

மரியாவுக்கு இயேசு கொடுக்கப்பட்டார் என்றால், நம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் இயேசு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென மரியா விரும்புவார் அல்லவா? மரியாவும், யோசேப்பும் “சத்திரத்தில் இடம் இல்லை” என்ற நிலையிலும் எதிர்பாராத இடத்தில் இடையர்களுக்கு இயேசுவைப் பகிர்ந்துகொண்டார்கள். அந்த எதிர்பார்த்திராத இடம் எதுவென்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். நம்முடைய விரல்நுனியில் இதற்குப் பதில் கிடைக்காது. அந்த எதிர்பாராத இடம் நம்முடைய உள்ளமே. இந்தக் கிறிஸ்மஸ் பெருவிழாவின்போது, ஏற்கெனவே நம் இல்லங்களில் குடிக்கொண்டிருக்கும் இம்மானுவேலை நாம் மறுபடியும் சந்திக்கச்செல்வோம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

ஆனால், மரியா, இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.
(லூக்கா 2:19)

**இன்றைய வாசகங்கள்:**

எண்ணாகமம்: 6: 22-27;
திருப்பாடல்: 67: 2-3, 5, 6, 8;
கலாத்தியர்: 4: 4-7;
லூக்கா: 2: 16-21.

*Published by:*
Peninsular Malaysia Pastoral Team
*Email:* api@archkl.org
**INTERNAL CIRCULATION ONLY**
BUL 01/2023